இதழ்–38

01.12.2021

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்



# குழந்தைகளுக்கான உலகை அனுமதிப்போம்...!




“நாம் பார்க்காத காலத்திற்கு நாம் அனுப்பும் உயிருள்ள செய்திகள் குழந்தைகள்.” -ஜான் எப். கென்னடி- (அமெரிக்காவின் 35வது ஜனாதிபதி)

எனினும் சமகால உலகின் நிகழ்வுகள் குழந்தைகளின் எதிர்காலங்களை நிர்மூலமாக்குவதாகவே அமைகிறது. நாம் பார்க்காத காலத்திற்கு யாரையும் செல்ல அனுமதியோம் எனும் அராஜக கூட்டத்தின் மத்தியில் தான் இன்று வாழ்கிறமோ என்ற எண்ணங்களே பல சந்தர்ப்பங்களில் எழுகின்றது.

இற்றைக்கு இரு தசாப்தங்களுக்கு முன்னர் ஓர் படம் புகைப்பட கலைஞனையும் மரணத்திற்கு இழுத்து சென்றது. அதாவது சூடான் பஞ்சத்தின் துன்பத்தை வெளிப்படுத்தும் விதத்தில் புகைப்பட பத்திரிகையாளர் கெவின் கார்டன், என்பு மட்டும் மிஞ்சிய ஓர் சிறுமியை இரைக்காக கழுகு காத்திருப்பது போன்ற புகைப்படத்தை மார்ச் 26, 1993அன்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையில் வெளியிட்டிருந்தார். இப்புகைப்படத்தை பார்த்த பலரும் சிறுமியின் உதவிக்கு கேமராவை கீழே இறக்கியிருக்க வேண்டும். கார்டன் மனிதாபிமானவற்றராக விமர்சிக்கப்பட்டார். உலகின் வஞ்சனையால் இறுதியில் 1994இல் கெவின் கார்டன் உயிரை மாய்த்து கொண்டார்.

கெவின் கார்டன் செய்தது சரி / பிழை என்ற வாதங்களுக்கு அப்பால், நிந்தனையால் கார்டனை கொலை செய்த சமூகம் சூடனில் பஞ்சத்தால் இறக்கும் சிறார்களுக்கு என்ன செய்தார்கள்? இவ்வாறே 2015இல் துருக்கி கடற்கரையில் மரணித்த சிரிய அகதி சிறுவனின் புகைப்படங்களுக்கு பல இரங்கள் கவிகள் இணையத்தில் உலாவின. எனினும் இன்றுவரை மேற்காசியாவில் எதிர்காலத்திற்குள் பயணிக்காது பல மழலைகள் மண்ணிற்கே உரமாகி செல்கிறார்கள். மேற்கு ஆசியாவில் போரை தடுக்க முடியவில்லை. இவ்வாறானதொரு தொடர்ச்சியிலேயே ஓரிரு நாட்கள் தலைப்பு செய்திகளுடன் மௌனிக்கப்பட்டு விட்டது கின்னியாவில் பாடசாலை சென்ற மாணவர்கள் படகு விபத்தில் மரணமும்.

வன்புணர்வு, விபத்து, வீண் சாவு என்று சிறார்கள் வாழவே முடியாத நாட்டையும் உலகத்தையும் வைத்துக் கொண்டு குழந்தைகளுக்காக தவம் கிடப்பதும், குழந்தைகளற்ற தம்பதியரை புறக்கணிப்பதும் முட்டாள்த்தனமானது.

***வளர்ப்பிக்க முடியாத உலகை வைத்துக்கொண்டு பிறப்பிக்க முடியாத கருப்பைகளை குற்றம் சாட்டாதீர்கள்...!!!***

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்
த. அபிவர்ணா

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

## இவ்விதழில் துமித்தவை...

04 கலாபக் காதலர்களை கண்டீரோ?
07 பிரண்டையின் மருத்துவம்
10 சிங்ககிரித்தலைவன்
13 அழுகை
15 ஈழச்சூழலியல்
19 என் பெண்மையின் பரிபூரணமே..
25 குறுக்கெழுத்துப்போட்டி
26 குருவை மிஞ்சிய சீடன்
31 சித்திராங்கதா
35 ஒரு பாதி கதவு நீயடி...
39 Mr. 360



## விழிப்போடு இருப்போம்....

**உலக எய்ட்ஸ் தினம்**
**டிசம்பர் 01**



# கலாபக் காதலர்களை கண்டீரோ...?

"மயில் போல பொண்ணு ஒன்னு
கிளி போல பேச்சு ஒன்னு
குயில் போல பாட்டு ஒன்னு
கேட்டு நின்னு
மனசு போன இடம் தெரியல
அந்த மயக்கம்
இன்னும் தெளியல ..."

பெண்கள் என்றாலே அழகு! சிரித்தாலும், அழுதாலும், கோபப் பட்டாலும், வெட்கப்பட்டாலும், சண்டை போட்டாலும், சோம்பல் முறித்தாலும், கூந்தலை ஒதிக்கினாலும், புருவத்தை தூக்கி பேசினாலும், உதடு சுளித்தாலும்... இப்படி பெண்ணுக்கு எல்லாமே பேரழகுதான்...

ஆணுக்கு?

அட்டைப்படத்தை மீண்டும் ஒருமுறை பாருங்கள்!

அழகானவற்றை கண்டாலே பெண்களிற்கு ஒப்பிட்டு விடுகின்ற கவிஞர்கள் மறந்துபோன உண்மை எது தெரியுமா? தோகை விரித்து ஆடுகின்ற கானமயில் - கலாபமயில் எல்லாமே ஆண்மயில்கள் தானே? பிறகு எப்படி மயில் போல பொண்ணு ஒன்னு? இந்த முரணோடு கொஞ்சம் முன்னேறிப் பார்ப்போம்.

மயில் ஆடுவதைப் பார்த்தால் விலகிச் செல்ல மனம் இடந்தராது. காணக் காணக் கானமயிலின் ஆட்டம் உள்ளத்தினை இன்பத்தில் ஈரமாக்க வல்லது. மேகத்தைக் கண்ட அந்த நொடியே மயிலுக்குக் கொண்டாட்டம் தொடங்குகிறது. மழை பெய்தால் அடடா அதன் ஆனந்தத்தின் உச்சமாய் தோகை விரிக்கிறது.

தான் கவிமழை சிந்தக் கண்டு களிக்கும் கலாப மயிலே என்று சகலகலாவல்லியினை அழைத்து



மகிழ்ந்தார் குமரகுருபரர். அது என்ன கலாபமயில் ? கலாபம் என்றால் ஆண்மயிலின் தோகை . தோகை விரித்தாடும் மயிலினையே கலாபமயில் என்கிறார்களாம். உண்மையில் அது மட்டுந்தானா? அப்போது கலாபக்காதலன் என்பது? இங்கு முரணில்லாமல் மயில் ஓர் ஆணிற்கு உவமையாக்கப்பட்டிருக்கிறது போல் தெரிகிறதல்லவா? வாருங்கள். கொஞ்சம் துலாவிப் பார்ப்போம்.

உண்மையில் மயில் மழையைக் கண்டுதான் தோகை விரித்து கொண்டாடுகிறதா என்றால் இல்லை. அது தன் துணையை கவர்வதற்காய்த்தான் போராடுகிறது. துணையின் பார்வையில் தன் அழகிய தோகை தென்படும் வரை அது ஆடுகின்ற ஆட்டமே எமக்கு கொண்டாட்டமாய்த் தெரிகின்றது.

உடல் வேட்கை கொண்ட ஆண் மயில், பெண் மயிலைக் கவர்வதற்காக மோக மிகுதியில் தோகை விரித்து ஆடும்போது அதன் உயிர்ச்சக்தி தரையில் விழும். ஈர்க்கப்பட்ட பெண் மயில் அதனைக் கொத்தி உண்டு கருத்தரிக்கிறது. அறிவியல்பூர்வமாக இது தவறெ ன்றாலும் இலக்கியக்கூற்றுக்கு இந்த காதலையே கலாபக்காதல் என்று கவிஞர்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மயிர் நீத்தால் உயிர் நீக்கும் கவரிமான் போல் - பாலைத்தனியே பகுத்துண்ணும் அன்னப்பட்சி போல் - பொய்யாகவே இருந்தாலும் கவிதைகளிற்கு இந்த கலாபக் காதல் கருப்பொருளும் அழகாய் கை கொடுக்கிறது.

தூரங்களால் கலந்து மனங்களில் இணைந்த காதலே இந்தக் கலாபக்காதல். காரணங்களற்ற காதலாகி ஓர் ஈர்ப்பின் விளைவாக தொடாமல் கொள்ளாமல் தொலை விலிருந்து காதல் செய்பவனையே “கலாபக் காதலன்” என்று சொல்லி வைத்திருக்கிறார்கள்.

“ஒன்றா ரெண்டா ஆசைகள்
எல்லாம் சொல்லவே
ஓர் நாள் போதுமா
அன்பே இரவைக் கேட்கலாம்
விடியல் தாண்டியும்
இரவே நீளுமா
என் கனவில் நான் கண்ட
நாள் இதுதான் கலாபக் காதலா
பார்வைகளால்
பல கதைகள் பேசிடலாம்
கலாபக் காதலா”

பல நாள் காத்திருந்த தனிமை நிறைந்த ஓர் இரவு புது மணம் கொண்ட ஆணுக்கும் பெண்ணுக்கும் ஆகச்சிறந்த முதல் இரவாக ஆசீர்வதிக்கப்படுகிறது. நீளக்கூடாத இரவில் பார்வைகளால் மட்டுமே பல கதைகள் பேச கணவனை “கலாபக் காதலா” என்று அழைக்கிறாள் காதல் மனைவி. அதாவது இணையாமல் பார்வையில் பேசிக்கொள்ளும் காதலை “கலாபக் காதல்” துணைகொண்டு எழுதுகிறார் கவிஞர் தாமரை.

“கலாபம் போலாடும் கனவில்
வாழ்கின்றேனே
கைநீட்டி உன்னை தீண்டவே
பார்த்தேன் ஏனதில் தோற்றேன்
தள்ளிப் போகாதே”

காதல் கொண்ட கனவில் காதலியின் காதல் மொழியை யாசிக்கும் ஆணின் தவிப்பு இது. உயிர்போகும் தருவாயில் காதல் சொல்லப்பட்டாலும் அதுவரை தூரத்திலிருந்து காதல் கொண்டு வாழ்ந்த வாழ்வை இந்த இடத்தில் கலாபக் காதல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

எத்தனையோ காதல் முறைகளை இலக்கியங்கள் கற்றுத் தந்தாலும் இந்த மயில் காதல் வேறொரு பரிணாமம். அது செயற்கையற்ற இயற்கையான ஓர் அழகை எடுத்துக்காட்டுகிறது.

கலாப மயில் ஆண்களுக்கான பேருவமையாக அமைந்து விடுகிறது. தொலைவிலிருந்தே தன் துணையை வசீகரிக்க ஆண்கள் எடுத்துக்கொள்ளும் பகீரதப் பிரயத்தனங்கள் எல்லாமே கலாபங்கள் ஆகி நிற்கின்றன.

உலக மங்கையர்களின் அனைவரையும் தன் மந்திரகீதத்தால் வசப்படுத்தும் மாதவன் கூட தன் பூங்குழலிலும் சிகையிலும் மயிலிறகினையே ஆதரமாய்க் கொண்டுள்ளான். மாதவனை மிஞ்சிய கலாபக்காதலன் இருக்கமுடியுமா என்ன?

இன்னொரு பக்கம் அழகன் வடிவேலன் மயில் மீதே ஏறி வருகிறான். வள்ளியினை கவர்ந்தும் சென்றுவிட்டான். கலாபக்காதலன் கதைகள் இப்படி ஏராளம் சொல்லமுடியும்.

ஏன்? பிரதோஷ காலத்தில் சிவபெருமானுக்கு கூட “பிஞ்சகன்“ என்று பெயர். பிஞ்சகன் என்றால் மயில் தோகையுடன் ஆடுபவன் என்று பொருள். சிவன் மயில்த்தோகையுடன் ஆடும் அந்த தாண்டவத்திற்க்குத்தான் பிரதோஷ தாண்டவம் என்று பெயராம்.


இப்படி வாழ்வியல் வழி கூற வந்த இறைவர்கள் கூட ஆணாக பிறந்தமையால் கலாபக் காதலர்களாகவே வாழ்ந்துள்ளனர்.

தன் காதலினை வெளிப்படையாக வெளிப்படுத்த முடியாமல் இரகசியமாய் தன் துணையை கவர ஆண்கள் செய்கின்ற அத்தனை கலாபங்களும் எவ்வளவு இரசனையானவை என இனி சிந்தித்துப் பாருங்கள்.

இனி அழகும் ஆண்மையும் இணைகின்ற நொடியில் ஒரு கலாபமயில் எம் கண்களிற்கு தென்படத் தொடங்குமல்லவா? தூரத்தில் ஒளிரும் ஒவ்வொரு ஆணின் கலாபங்களின் செயற்கைத் தனமில்லாத இயற்கையினை உணரத்தொடங்கினால் ஓர் உண்மை நமக்கு புலப்படும்.

***அழகு என்பது ஆண்பால்தான்!***

சிந்துஜா தவராசா



# பிரண்டையின் மருத்துவம்

சித்தர்கள் தமிழோடு ஆன்மீகத்தை மட்டுமல்ல மருத்துவத்தினையும் வளர்த்துள்ளார்கள். சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவ முறையாகும். பண்டைய சித்தர்கள் தம் அருள் ஞான அறிவால் அதனை நன்குணர்ந்து துல்லியமாகவும் கூறியுள்ளனர். சித்த மருத்துவம் தோன்றிய காலவரையறை சார்ந்து இதுவரை கூறமுடியவில்லை. நம் பாரம்பரிய மரபு முறைப்படி பரவி வந்துள்ளது என்றே அறிய முடிகிறது. ஒவ்வொரு மூலிகை குறித்தும் அதற்குண்டான மருத்துவ குணங்களைக் கண்டறிந்து எழுதி வைத்துள்ள சித்தர்கள் நமது நாட்டில் இயற்கையில் விளைகின்ற பல்வேறு மூலிகைகள் குறித்து ஆராய்ச்சி செய்துள்ளனர்.



அந்த வகையில் சித்தர்களால் மிகவும் போற்றப்பட்ட ஒரு மூலிகை வகையாக பிரண்டை அமைகிறது. இலக்கியங்களிலும் பிரண்டை குறித்த பதிவுகள் இடம்பெற்றுள்ளன. தமிழ் அகராதியில் பிரண்டை **“பிரண்டை பரண்டை”** என அமைந்துள்ளது.

ஆறுசெல் மாக்கள்
அறுத்த பிரண்டை
ஏறு பெறு பாம்பின் பைம் துணி கடுப்ப
நெறி அயல் வறிது திரங்கும் அத்தம்
-அகம் 119:.5-7

என அகநானூற்றுப் பாடல் பிரண்டை பற்றி குறிப்பிடுகின்றது.



.வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய வாழ்க்கை முறையில் உடலுக்கு ஆரோக்கியம் தரும் பல வகையான இயற்கை மூலிகைகளை இனங்கண்டு கொள்ளாமலே கடந்து செல்கின்றோம். பெரும்பாலான மூலிகைகள் ஒரு சில வியாதிகளுக்கு மாற்றீடாக விளங்குகின்றன. ஆனால் பிரண்டை என்னும் தாவரம் உடலில் ஏற்படும் பல வகையான பிரச்சினைகளுக்கு மாற்று வழியாக விளங்குகிறது .



பிரண்டையானது களிப்பிரண்டை, தீம் பிரண்டை, புளிப்பிரண்டை என நான்கு இனங்கள் உள்ளதாக பதார்த்த குண சிந்தாமணி நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உடலுக்கு ஆரோக்கியம் தரும் பல வகையான இயற்கை மூலிகைகளை இனங் கண்டு கொள்ளாமல் அவற்றின் பயனை இழக்கின்றோம். பொதுவாக மனித நடமாட்டம் குறைவான பற்றைக் காடுகள் மற்றும் வேலிகளில் படர்ந்து வளரும். பிரண்டை சதைப்பற்றான நாற்கோண வடிவமான தண்டுகளையுடைய ஏறு கொடி அமைப்பில் வளரும் தாவரம் ஆகும். மலர்கள் பச்சை கலந்த



மஞ்சள் நிறமானவை கனிகள் சிவப்பு நிறத்தில் உருண்டை வடிவமானவை. விதை வழவழப்பானவை.

உடைந்த எலும்புகளை ஒட்ட வைக்கும் குணத்தன்மையினால் வஜ்ரவல்லி என்ற பெயரும் இதற்கு உண்டு. பிரண்டைச்சாறு உடம்பில் பட்டால் அதிகமான அரிப்பும் நமைச்சலும் ஏற்படும். வேர், தண்டு ஆகியவை அதிகமான மருத்துவப் பயனுள்ளவை. தண்டு கார்ப்புச் சுவையும் வெப்ப தன்மையும் கொண்டது. பிரண்டையில் சாதாரண பிரண்டை, சிவப்புப் பிரண்டை, உருட்டுப் பிரண்டை, முப்பிரண்டை,



தட்டைப்பிரண்டை என பல வகைகள் உள்ளன. சாதாரண பிரண்டை நான்கு பட்டைகளைக் கொண்ட அதிகமாக காணப்படும் பிரண்டை வகையாகும். இதனையே நாம் பொதுவாக உபயோகிக்கலாம். பிரண்டையை சாப்பிடுவதனால் உடலுக்கு எண்ணற்ற நன்மைகள் கிடைக்கின்றன. பிரண்டையை நன்கு சாப்பிடும் போது உடலுக்கு சிறந்த பழக்கத்தையும் கொடுக்கிறது.

*ஆராய்வோம்....*

## செய்தித் துளிகள்



1. உலகின் முதல் பிட்காயின் நகரத்தை உருவாக்க இருப்பதாக மத்திய அமெரிக்க நாடான எல் சால்வடார் அறிவித்துள்ளது.

2. உலகின் முதல் மின்சார தானியங்கி சரக்கு கப்பல் நோர்வேயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## உடல் வெப்பத்தை எரிசக்தியாக மாற்றும் தொழில்நுட்பம்



நடனமாடுவோரின் உடல் வெப்பத்தை புதுப்பிக்கத்தக்க எரிசக்தியாக மாற்றும் தொழில்நுட்பத்தை Glasgow இல் உள்ள SW63 என்ற இரவு கேளிக்கை விடுதி பரிசோதனை செய்யவுள்ளது. Body heat எனப்படும் இந்த அமைப்பு மூலம் விடுதியை வெப்பமேற்ற மற்றும் குளிராக்க முடியும் என கூறப்பட்டுள்ளது.

## உலகின் பணக்கார நாயின் வீடு 32 மில்லியன் டாலருக்கு விற்பனை!



உலகிலேயே பணக்கார நாயான குந்தர் தனது வீட்டை 32 மில்லியன் டாலருக்கு விற்பனை செய்வதாக அறிவித்துள்ளது. உலகிலேயே பணக்கார நாய்க்கு குந்தர் (Gunther VI) என பெயரிடப்பட்டுள்ளது. இந்த நாய் தனது தாத்தா நான்காம் குந்தரிடம் இருந்து 500 மில்லியன் டாலர் சொத்துக்களை பெற்றுக்கொண்டது. ஆகவே, தற்போது உலகிலேயே பணக்கார நாயாக குந்தர் அழைக்கப்படுகிறது. 1992ஆம் ஆண்டில் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த கர்லோட்லா லெய்பென்ஸ்டன் என்ற நபர் தனது நாய்க்கு அந்தக் காலத்திலேயே 58 மில்லியன் டாலர் சொத்தை பரிசாக அளித்தார். அதன்பின்னர் அந்த நாயின் வாரிசுகள் செல்வந்தராக வாழ்ந்து வருகின்றனர். நாயின் சொத்துகளை நிர்வகிக்க தனிக் குழுவும் இருக்கும் நிலையில், அமெரிக்காவில் மியாமியில் உள்ள பெரிய வீட்டை 32 மில்லியன் டாலருக்கு விற்பனை செய்கிறது குந்தர்.

ஜீவா ஷஜீவனின்

# சிங்கக்கிரித்தலைவன்

## ஆட்சி 35

### மல்லனா மகாநாமரா?

"புத்தம் சரணம் கச்சாமி,
சங்கம் சரணம் கச்சாமி,
கர்மம் சரணம் கச்சாமி"

மல்லனின் போலித் துறவி அணி கீழக்கரையில் தம் தேடுதல் வேட்டையை ஆரம்பித்தது! ஒவ்வொரு தெருவாக மல்லனின் போதை துறவிகள் மகாநாமரைப் பற்றியும் முகலனைப் பற்றியும் விசாரித்தவாறு சென்றார்கள்! தாம் அவர்களின் சீடர்கள் என்றும் அவர்களைப் பின் தொடர்ந்து தம் கப்பல் வர இருந்தது என்றும் தம் மரக்கலத்தில் திடீரென ஏற்பட்ட கோளாறால் மீண்டும் மாந்தை சென்று இத்தனை நாட்கள் கழித்து வருவதாகவும் கதையளந்தவாறே தம் காரியத்தில் கண்ணாய் இருந்தனர். ஆனால் எங்கும் மகாநாமரைப் பற்றியோ முகலனைப் பற்றியோ எந்த தகவலும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை! சலிப்படைந்த மல்லனின் குழு அன்றிரவு சத்திரத்தை அடைந்து அங்கே விளக்கேற்றிக் கொண்டு தங்கியது!

"மல்லரே.... எமது ஒற்றர்கள் சொன்ன தரவின்படி அவர்கள் இங்கு தானே தங்கியிருக்க வேண்டும்? ஒரு வேளை நாம் வருவதை அறிந்து இடம் மாறிந் சென்று விட்டார்களா?"

மல்லனின் அணி வீரன் களைப்போடு கட்டிலில் சாய்ந்திருந்த மல்லனிடம் வினாவினான்.

"இல்லை... நாம் வருவதை அவர்கள் அறிய வாய்ப்பு இல்லை! ஆனால் ஊகித்திருக்கலாம்...."

என்று மல்லன் சொல்லி முடிப்பதற்குள் நமக்கு முன்னரே பழக்கப்பட்ட ஒரு குரல்

"சாதுக்களே இரவு உணவு தயாராகி விட்டது... தாங்கள் பசியாறலாம்"

மல்லன் எரியும் தீப ஒளியில் வாசலைப் பார்த்தான். குழலி தங்கப் பதுமையைப் போல் நின்று கொண்டிருந்தாள்!

"யாரம்மா நீ..... உள்ளே வா...."

500px

துள்ளல் நடையோடு குழலி மல்லனின் அருகில் வந்து வணங்கி நின்றாள்! மல்லன் தன் குரூர விழிகளால் குழலியை அங்குல அங்குலமாக இரசித்தான்.... அந்த மங்கல் ஒளியில் குழலி அதனைக் கவனிக்கவில்லை.

“வணங்குகின்றேன் தேவா.... நான் குழலி இந்த சத்திரத்திற்கு உணவு கொடுக்கும் பொறுப்பில் உள்ளேன்...”

“அடடா... அப்படியா... எம்மைப் போன்ற சாதுக்களுக்கு ஏற்ற உணவுகளை உன்னால் வழங்க முடியுமா?”

குழலி கலகலவென சிரித்தாள்.

“நேற்றுவரை அடுத்த தெருவில் உள்ள சத்திரத்தில் தங்கியிருந்த சாதுவுக்கு நானே என் கையால் சமைத்துக் கொடுத்தேன்...”

மல்லனின் விழிகள் அகலத் திறந்து கொண்டன. ஏனைய போலி சாதுக்களும் வாயடைத்து நின்றனர் எதையும் வெளியிலே காட்டிக் கொள்ளாதவனாக மல்லன்,

“ஆஹா..... நாம் தேடிவந்த எம் குருநாதர் மகாநாம தேரரா அவர்?”

“ஆம் அவரே தான். அவர் உங்கள் குருவா? ஒரு நாள் முன்னே வந்திருந்தால் கூட அவரை நீங்கள் கண்டு மகிழ்ந்திருக்கலாமே....”



“ஏனம்மா? இப்போது அவர் எங்கே? இப்போதே அவர் திருவடிகளை வணங்க மனம் ஏங்குகின்றது…”

வந்த வேலை ஆரம்பத்தில் கொஞ்சம் கலக்கத்தை தந்தாலும் இப்போது எளிதாக நிறைவேறப் போகின்றது என்று மல்லன் மனக்கணக்கு போட்டுக் கொண்டான்! ஆனால் அது குழலியின் மறுமொழியில் கானல் நீராய்ப் போனது!

“இல்லை தேவா…. அவர்கள் மதுரைக்குப் புறப்பட்டுவிட்டனர். என் பெரிய தகப்பனாரும் தான் உடன் போகின்றார்..”

மல்லன் இலாவகமாகப் பேசி மதுரை போகும் பாதையை அறிந்து கொண்டான். அடுத்த கணமே குழலியை அனுப்பிவிட்டு நான்கு குதிரைகள் வாங்கி வர இருவரை அனுப்பிவைத்தான் மல்லன்!

அதேநேரம் தஞ்சையை நோக்கி இரண்டு மாட்டு வண்டிகளும் இரண்டு குதிரைகளும் மெல்ல மெல்லமாக நகர்ந்து கொண்டிருந்தன. கையில் தீப்பந்தத்தை உயர்த்திய படி முகலன் குதிரையில் முன்னே செல்ல உத்தமரும் மகாநாமரும் மாட்டுவண்டியில் பயணப்பட்டனர். அதிக தூரம் பயணித்ததாலும், இருண்டு போனதாலும் ஒரு ஆலமரத்தடியில் வண்டில்களை நிறுத்திவிட்டு, இளைப்பாற இறங்கினர்.

மகாநாமர் முகலனைப் பார்த்தார். அவனோ களைத்துப் போயிருந்தான்!

“முகலா…… இந்த திடீர் பயணம் உன்னை களைப்படையச் செய்திருக்கும் ஆனால் இது உன் பாதுகாப்புக்கானது என்பதை நீ அறிய வேண்டும்…. எப்படியும் புனித தந்த தாது இங்கு வந்ததை காசியப்பன் அறிந்திருப்பான். அவன் கோவத்தின் உச்சத்தில் எம்மை அழித்துவிட ஏற்பாடுகளை செய்திருப்பான்! அதற்கு முன்னர் நாம் தற்காத்துக் கொள்வது முறை தானே..”

“தேவா….. நீங்கள் எதைச் செய்தாலும் அது எம் நன்மைக்கு என்பதை நன்கு அறிவேன்! நீங்கள் காட்டிய வழியில் பயணிக்க நாம் எப்போதும் தயாராகவே இருப்போம்….”

முகலன் வணங்கிய படி சொன்னான்.

“அதுசரி முகலா குழலியிடம் நாம் மதுரை செல்வதாகத் தானே கூறினாய்?”
முகலன் முகத்தில் தெரிந்த களைப்பு குழலியின பெயரைக் கேட்டு மறைந்து போனது!

“ஆம் தேவா”

“ம்…. அதுவே சரி!”

மகாநாமர் தன் தலையை ஆட்டினார்.

**ஆட்டம் தொடரும்…**

# அழுகை....!!!

வனப்பில்லை.
வார்த்தை வலியானது.
என்னெதிரே
அவலங்கள் வரிசையாயின.

மாத்தளனை
கண்டு மாண்டும்
அதை மீண்டும் வந்தோம்.
ஆனால் நம்மிடம் மீட்சி அற்றன.

கடைசிவரையும்
சுமக்கப்படும்
அழுகைப் பாத்திரங்களிற்கு
ஒட்டகமாகினோம்.

அவர்களை
பெருமைப் படுத்திய
பயனப்பாடுகளை மறந்தனர்.
அவர்களை
அர்த்தப்படுத்திய
எண்ணப்பாடுகளை எறிந்தனர்.

தெளிவினை அணைக்க
முடியாமல்
காலச் சுவரிலே அறையப்பட்டேன்.
அன்பின் ஆலயங்கள் என்னிடம்
இல்லை.



இக்கணமும்
எதியோப்பியாவிலே
வாடுகின்றேன்.
வாட்டமும் நாட்டமும் இன்றி
பசியோடு தொட்டு நடக்கின்றேன்.

கணமும் தேடித்தொலையும்
அன்பூற்றின்
ஆத்மார்த்தத்தை யாரோ
களவாடினர்.
பித்துமனம்
கத்தத் தெரியாமல்
ஊமை அழுகையாகிறது.

ஈரமற்று போயற்று - என்
வண்ணம் என்னை விட்டுப் போயற்று.
மீளும் நினைவின்
உதிரத்தை உறிஞ்சிப் பார்க்கின்றர்.
சில விஷமிகள்.

வெம்மைத் தீவில்
வெண்மை தேடின் தவறோ?
பித்துமனதில்
பிட்டுக் கேட்பது பிழையோ?
இட்ட வாழ்வில்
எட்டிப்போவது தவறோ?
ஒட்டி உறவில்
மண்டியிடுவது பிழையோ?

நீ சொல்
விட்டுப்போன வார்த்தையை
அள்ளிப்போட்டாலும் அடங்குமோ?
திட்டிப்போன சொற்களை
கட்டிமறைத்தால் தாங்குமோ?

அன்பற்ற
பாலைவனத்தில் தொங்கிக் கொண்ட
பேதையானேன்.

வெளுறிக் கிடக்கும்
துணிக்கு சாயமின்றி
குறுகிப்போனேன்.

முற்றத்து மல்லியெல்லாம்
வெட்டிவிடப்பட்டு
வெறுத்துப் போனேன்.

சொட்டுக்காலம்
நட்டு
பூட்டுகின்றேன்.
பின்னர்
உன்னை மெட்டுப்போடுவேன்
அதுவரை
திட்டிப் போகாதே...!
தட்டிக் கொட்டாதே....!

அழுகை சுகம்........
அழுகை வதம்............

அழுகைக் குறிப்புக்கள்!!!

இசை




# ஈழச் சூழலியல் 24

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## நீர் மாசடைதல்

அமிலத் தன்மையான நீரில் வாழும் மீன்கள் அதிகளவான செறிவில் பார உலோகங்களைக் கொண்டிருக்கலாம். எனவே இவற்றை நுகரும் போது மனிதர்களின் உடலில் சேரலாம். நீரின் pH பெறுமானம் குறைவாக உள்ள போது பார உலோகங்கள் அதிகளவில் கரையும். இதனால் குடிநீரின் ஊடாகவும் பாரமான உலோகங்கள் உடலில் சேரலாம். அலுமினியத்தை அதிகளவில் உள்ளெடுக்கும் போது எலும்பு கரைதல் நோயும், Alzhemers நோயும் ஏற்படலாம்.

பாரம்பரியமான நீர் சுத்திகரிப்பு தொகுதிகள் நீரிலுள்ள பாரமான உலோகங்களை அகற்றும் வசதிகளைக் கொண்டிருப்பதில்லை. நீருக்கு சுண்ணாம்பை சேர்ப்பதன் மூலம் அமிலத்தன்மை உருவாகுவதை மறுபக்கத்திற்கு மாற்றமுடியும். இது நீண்ட காலமாக ஐரோப்பாவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சுவீடனில் மட்டும் 4000 ஏரிகளில் தூளாக்கப்பட்ட சுண்ணாம்புக்கல் (CaCO3), நீர் சேர்க்கப்பட்ட சுண்ணாம்பு (Ca(OH)2) மற்றும் உடனடி சுண்ணாம்பு (CaO) என்பன இதற்காக பயன்படுத்தப்படுகின்றன.





உலகளாவிய ரீதியில் நீர் நிலைகளை மாசடையச் செய்வதில் விவசாயக் கழிவுகள் பெரும் பங்கினை வகிக்கின்றன. பல மில்லியன் வருடங்களிற்கு முன்னரே மனிதன் வாழ்ந்தாலும் கூட, விவசாயம் ஒப்பீட்டளவில் மிக அண்மையில் 12,000 வருடங்களிற்கு முன்னர் தோன்றியதாகும். கடந்த சில நூற்றாண்டுகளில் விசேடமாக கைத்தொழிற் புரட்சியின் பின்னர் இரசாயன, சேதனப் பசளைகள், வளர்ச்சி ஊக்கிகள், பீடைநாசினிகள் என்பனவற்றின் பாவனை பல மடங்கு அதிகரித்துள்ளது. இன்றும் கூட பெரும்பாலான நாடுகளில் விவசாய முயற்சிகள் மிகவும் செறிவாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் 700 மில்லியனிற்கும் அதிகமான மக்கள் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர். நாம் முன்னரே ஆராய்ந்தது போன்று இவர்களிற்குப் போதியளவான உணவை வழங்க அதிகரித்த அளவில் விவசாய இரசாயனங்ளைப் பயன்படுத்த வேண்டும்.

மேலும், மண்ணரிப்பிற்குட்படக் கூடிய வளமற்ற நிலங்களில் எவ்விதமான மண் பாதுகாப்பு (Soil Conservation) நடவடிக்கைகளையும் மேற் கொள்ளாது செய்கை பண்ணும் விஸ்தீரணம் நாளாந்தம் அதிகரித்த வண்ணமுள்ளது.

இதனால் மேல்மண் அதிகளவில் அரித்துச் செல்லப்படுகின்றது. உண்மையில் 1960களில் சிம்பாப்வே பத்து மில்லியன் தொன் நைதரசனையும், ஐந்து மில்லியன் பொசுபரசையும், மண்ணரிப்பின் மூலம் வருடாந்தம் இழந்துள்ளது. இவற்றில் பெரும்பாலானவை நீர் நிலைகளை அடைகின்றன. கமத்தொழில் மாசடைதலை ஏற்படுத்துவதோடு, மாசடைவதினால் பாதிக்கப்படு வதாகவும் விளங்குகின்றது. இது நீர்நிலைகளுக்கு கழிவுகளை கொடுப்பதோடு, மாசடைந்த நீரையும் பெற்றுக் கொள்கின்றது.

மாசடைந்த நீரினால் பயிர்கள் தொற்றலிற்கு உட்படுவதோடு, பண்ணைத் தொழிலாளர்களிற்கும் பாவனையாளர்களிற்கும் நோய் களைப் பரப்புகின்றன.

பசளைகளாகப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான பொருட்கள் நீரில் கரைவனவாகும். உதாரணமாக



யூறியா, அமோனியம் சல்பேற்று, செறிந்த சுப்பர் பொசுபேற்று, மியுறியேற்றுப் பொட்டாசு எனபனவற்றைக் குறிப்பிடலாம். இவ்வாறான பசளைகளை மண்ணிற்கு இடும் போது, அவை மழை நீரிலும், நீர்ப்பபாசன நீருடனும் கரைந்து நீர் நிலைகளை அடைவதைத் தவிர்க்க முடியாது.

**நைதரசன்**

ஐக்கிய அமெரிக்காவில் ஆறுகளையும், ஏரிகளையும் மாசடையச் செய்வதில் விவசாயமே முதலிடத்தை வகிப்பதாக 1994இல் பட்டியலிடப்பட்டது. ஐம்பது மாநிலங்களில், நாற்பது மாநிலங்களின் நிலத்தடி நீரை மாசடையச் செய்வதில் நைட்ரேட் முன்னணி வகிப்பதாக இனங் காணப்பட்டது. 2002 இல் சுவீடன் நாட்டில் சுமார் ஒரு இலட்சம் பேர் ஆரோக்கியமான வாழ்விற்கான எல்லையாக குறிப்பிடப்பட்ட 45 mg/l என்ற அளவை விட அதிகளவான நைற்ரேற்றைக் கொண்ட நீரையே தமது குடிநீர் தேவைகளுக்காக பயன்படுத்துகின்றனர் என மதிப்பிடப்பட்டது. சில நாடுகளில் 10 வீதத்திற்கும் அதிகமான மக்கள் உலக சுகாதார ஸ்தாபனத்தின் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லையான 50 mg/l என்ற அளவை விட அதிகளவான நைற்ரேற்டைக் கொண்ட நீரையே குடிநீராகப் பயன்படுத்துகினறனர்.

உலகில் மிகப் பொதுவாக இடப்படும் இரசாயனப் பசளைகள் நைதரசனைக் கொண்டனவாகும். இந்த நைதரசன் பொதுவாக அமோனியா அல்லது நைற்ரேற் என்னும் வடிவிலேயே காணப்படும். யூறியாவைப் (NH2CONH2) பொறுத்த வரை, அதனை மண்ணிற்கு இட்டவுடன் அமோனியாவாக மாற்றமடையும்.



மண்ணில் வாழும் பக்றீரியாக்கள் காற்றுள்ள போது அமோனியம் அயனை நைற்ரேற் ஆக மாற்றும். நைற்ரேற் மண் சூழ்நிலைப் பொருட்கள் என்பன எதிரேற்றம் கொண்டனவாகும். எனவே நைற்ரேற் அயன்கள் நிலத்தினால் பிடிக்கப்படாது நிலத்தடி நீர், அருவிகள், ஏனைய நீர்நிலைகள் என்பனவற்றை இலகுவாக சென்றடையும்.

நீர்நிலைகளில் காணப்படும் அதிகளவான நைதரசன், நற் போசணை என்னும் நிலைமைக்கு வழி வகுக்கும். குடிநீரில் அதிகளவான நைத்திரைற் நைதரசன் காணப்படும் போது மெதமொகுளோபிஅனீமியா அல்லது நீலக் குழந்தை என்னும் நோயிற்கு வழிகோலும். நைற்ரேற் நச்சுத் தன்மையானதல்ல. ஆனால் சிறுகுடலில் உள்ள பக்றீரியாக்களினால் நைத்திரேற் ஆனது நைத்திரைற் ஆக தாழ்த்தப்படும். அது பின்னர் குருதித் தொகுதியினுள் உறிஞ்சப்படும். குழந்தைகளினால் இந்த நைத்திரைற் நஞ்சினை அகற்ற முடியாது.

இதனால் இந்நைத்திரைற் செங்குருதிச் சிறுதுணிக்கைகளுடன் சேர்ந்து, குருதி, ஒட்சிசனை உறிஞ்சுவதைக் குறைக்கும். குழந்தைகள் அருந்தும் நீரில் 50 mg/l ஐ விட அதிகளவான நைட்ரேட் காணப்படும் போது அக்குழந்தைகள் மோசமாக நோயுறுவதோடு, மருத்துவ பரிகாரங்களை மேற்கொள்ளாத போது அக்குழந்தைகள் இறந்து போகலாம்.



பாரம்பரியமான நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் குடிநீரிலுள்ள நைத்திரைற்றின் அளவைக் குறைப்பதற்கான வசதிகளைக் கொண்டிருப்பதில்லை என்பதை மனதிற் கொள்ள வேண்டும். இதற்காகவே பல நாடுகளில் இவ்வாறான பல சுத்திகரிப்பு நிலையங்கள் மூடப்பட்டு வருகின்றன. யாழ்ப்பாண குடாநாட்டிலும், வடமேல் மாகாணத்தில் கல்பிட்டிய பிரதேசத்திலும் உள்ள ஆழமற்ற கிணறுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான நீர் மாதிரிகளில் நைத்திரேற் பகுப்பாய்வினை விவசாயத் திணைக்களம் மேற்கொண்டது. முடிவுகளின் படி உலக சுகாதார ஸ்தாபனத்தின் நியமங்களிற்கேற்றவாறான குடிநீராக எந்த மாதிரியும் காணப்படுவதில்லை.

ஆராய்வோம்........

(சென்ற இதழின் தொடர்ச்சி)



# என் பெண்மையின் பரிபூரணமே

இரா.வி.நவிலன்

வழமைபோலதான் அந்த நாளும் விடிந்தது. ஆனால் அவளுக்கு மட்டும் இது வித்தியாசமானது. கண்ணயர்ந்த மறுகணமே விழித்துவிட்டாற்போல் அவளுக்கு இருந்தது. எழுந்த சில வினாடிகளிலே நிகழ்கால நினைவுகளுக்குள் நுழைந்துவிட்டாள். வேகவேகமாக தயாரானாள். இருப்பதிலே நல்ல ஆடைகளை அணிவித்து தன் குழந்தைகளை அழகாக்கினாள். தானும் தன் தாயின் புடைவை ஒன்றை எடுத்து ஆசையோடு கட்டிக்கொண்டாள். தாயின் ஆசீர்வாதத்தை அந்தப்புடைவையில் தேடிக்கொண்டாள்.

அவள் தந்தை இன்னும் எழவில்லை. வழக்கமாக அவர் நித்திரை முடித்து எழும்ப ஒன்பது முப்பது மணியாவது ஆகும். அதற்கிடையில் கோயிலுக்கு போய் வந்து விடலாம் என்று இரு குழந்தைகளோடும் வாசலைப்பார்த்தபடி காத்துநின்றாள். தன் க்'டகாலத்தின் கடைசி விளிம்பில் நின்று விடைபெறுவது போல் ஏதோ ஆனந்தமொன்று உள்மனதில் ஊறிக்கொண்டே இருந்தது.

கடிகாரத்தைப் பார்த்தாள். நேரம் ஆறு நாற்பது ஆகி இருந்தது. "ஏழு மணிக்குத்தானே வாரதா சொன்னவர். இப்பவே ஏன் அவசரப்படுறா?"

என்று தன்னைத்தானே கிண்டல் அடித்தும் கொண்டாள்.

இதற்கிடையில் அவளைப் பின்பக்கமாக தட்டிக்கொண்டு

"எங்கம்மா போப்போறோம்?"

கேட்டபடி நின்றாள் இளையமகள் சாலினி. திரும்பி அவள் உயரத்திற்கு குனிந்து

"கோயிலுக்குப் போப்போறோம்."

என்றாள். இதுவரை அப்படி ஒரு மகிழ்ச்சியை சாலினி கூடத் தன் தாய்முகத்தில் கண்டதில்லை.

“ஆ... அப்பிடியெண்டா ஆட்டோலயோ போறம்?”

என்று தன் எதிர்பார்ப்பை வெளிப்படுத்தினாள் சாலினி.

“ஆமாண்டா.. நான் சாலிக்குட்டி துவா அண்ணா அதோட அந்த ஆட்டோ மாமா நாலு பேரும் கோயிலுக்கு போறோம்”

“ஐ.. அப்ப நான் அந்த ஆட்டோ மாமாட மடியில இருந்து அந்தக் கண்ணாடியில ரோட்ட பார்த்துக்கொண்டுதான் வருவன்”

என்று சொன்ன சாலினியின் விழிகளைப்பார்த்து கேட்டாள் “சாலிக்குட்டிக்கு அந்த ஆட்டோ மாமாவை பிடிக்குந்தானே?”

“ஓ.. பிடிக்குமே..”

“அப்பிடியெண்டா அவரயும் கோயிலுக்கு கூட்டிக்கொண்டு போய் இனி சாலிக்குட்டிய எப்பயுமே பிரியக்கூடா எண்டு சத்தியம் வாங்குவோம். அதுக்குப்பிறகு அவர் சாலிக்குட்டியோடயே எப்பயும் இருப்பார். ஒரு அப்பா போல கூடவே இருப்பார்.”

முழுவதுமாய் கூறிமுடித்துவிட்டு இமைமூடாது அவள் பதிலுக்காய் எதிர்பார்த்து நின்றாள்.

“ஓ... அப்ப இனி நான் எங்க போனாலும் ஆட்டோலதான் போவன். ஆட்டோ மாமா போற இடமெல்லாம் போவன்” என்று சந்தோசத் தாளத்திற்கு தலையாட்டியபடியே வார்த்தைகளை உதிர்த்தாள் சாலினி.

இவள் எதிர்பார்த்து நின்ற “அப்பா” என்ற வார்தையை சாலினி கண்டுகொள்ளவே இல்லை. பாவம் அந்த வார்த்தைகளின் அர்த்தம் அவளுக்குப் புரிந்திருக்கத்தான் வாய்ப்பில்லையே என்று தன் மனத்துள்ளே நினைத்துக்கொண்டு சாலினிய கட்டித்தழுவிக் கொண்டாள். இளைய மகளை தழுவிக் கொண்டிருந்த பொழுது இன்று மட்டும் ஏதோ அதிசயமாய் வாசலில் பூத்து நின்ற அந்த சூரியகாந்திப்பூவை என்னவென்று புரியாமல் விசித்திரமாக பார்த்துக் கொண்டிருந்த துவாரகனை கண்டதும் எழுந்துவந்து அவனருகில் அமர்ந்து கொண்டாள். அவன் வலது கையை வாங்கி தன் மடி மேல் வைத்து பின் அந்தக்கையை தன் இரு கைகளுக்குமிடையில் அழுத்திப்பிடித்துக் கொண்டு அவன் விழிபார்த்து இருவரும் தம் மொழி பேசிக்கொண்டிருந்தனர்.

“ஆட்டோ மாமா.. ஆட்டோ மாமா...’

என்று கத்திக்கொண்டுவந்த சாலினியின் குரல் கேட்டு திடுக்கிட்டு எழுந்து நின்று கொண்டாள். வாசலில் ஆட்டோ ஓய்வடைந்ததும்

“அம்மா வாங்கோ கெதியாய்..”

என்றவாறே ஆட்டோக்குள் ஏறி அமர்ந்து கொண்டாள் சாலினி.

அவன் ஆட்டோவை விட்டு இறங்கி

இவளருகே நடந்து வந்தான். தன்னைக் கண்டு கொள்ளாத அவன் செயல் சாலினிக்கு பெரியதோர் ஏமாற்றத்தை தந்தாலும் ஆட்டோவில் போகப்போகும் சந்தோசத்தில் அவள் மூழ்கிப்போய்விட்டாள்.

அருகில் வந்து கொண்டிருந்த அவன் கண்களை நோக்கி

"வெளிக்கிடுவோமா? நேரம் போகுது.."

என்று கேட்டாள். அவளை நிமிர்ந்து பார்த்து விட்டு பதிலேதும் சொல்லாமல் அருகில் வந்தான்.

இவள் முகத்திலிருந்த புன்னகை கொஞ்சம் கொஞ்சமாய் ஓய்வடைய தொடங்குகியது. அருகில் வந்த அவன் இவள் கண்களைப்பார்த்து விட்டு உடனே பார்வையை திசை திருப்பிக் கொண்டான்.

"என்ன ரவி? என்னாச்சு? ஒரு மாதிரியா இருக்கிறீங்க.."

அவள் கேட்டுவிட்டாள்.

"ஓ.. ஒண்டுமில்ல. நேத்து மனசு பொறுக்காம அம்மாட்ட போய் எல்லாத்தையும் சொல்லிட்டன். இண்டைக்கு எடுத்த முடிவு பற்றியும் சொன்னன்."

என்றவாறே தலையை நிமிர்ந்து இவள் முகமாற்றத்தை அவதானித்தான். மலர்ந்த கடைசிப் புன்னகையும் அவள் முகத்தை விட்டு எங்கேயோ ஓடி ஒளிந்து கொண்டிருந்தது.

"ஒண்டுமில்ல. முதல்ல கொஞ்சம் கத்தினாங்க. பேந்து நான் சொல்லச்சொல்ல ஒரு மாதிரி சம்மதிச்சிட்டாங்க. ஆனா தன்னோடயே இருக்கச் சொல்லிக் கேட்டாங்க. நானும் போயிட்டா தன்னால தனிய இருந்து ஒண்டும் பண்ணேலாதாம் எண்டாங்க.. அதுதான்.. எங்கம்மா கூட இருக்கிறது உனக்கு ஓகேயா?" என்று வேகவேகமாக கூறி முடித்து விட்டான்.

அவள் ஒரு பெருமூச்சோடு...

"பிரச்சனை இல்ல ரவி. உங்க அம்மாவோடயே இருப்பம். அவாவும் பாவம்தானே? தனிய இருந்து வீணா எதுக்கு கஷ்டப்படோணும்? அவாக்கு நாங்க இருக்கிறது சம்மதம் எண்டா வயசான காலத்தில தனிய விட்டிட்டு நாங்க ஏன் வேற வீடு பார்க்கோணும்?"

என்று மலர்ந்த புன்னகையோடு கூறி முடித்தாள்.

"தாங்ஸ் ஜெயந்தி.. நேற்று முழுக்க அம்மா ஒரே அழுகை. கடைசியாத்தான் இதக் கேட்டா.. நீ சம்மதிப்பியோ எண்டுதான் பயந்து கொண்டிருந்தன். ஏனெண்டா நீயும் உன்ர அப்பாவ தனிய விட்டுட்டு தானே வர்றா.."

என்று தயங்கியபடி நின்றவனை இடைமறித்து

"இதில என்ன இருக்கு ரவி. உங்கட அம்மா சம்மதிச்சதுவே பெரிய விசயம். வேற யாராச்சும்

சம்மதிப்பாங்களோ சொல்லுங்கோ. நாங்க இதெண்டாலும் பண்ணேலாட்டி எப்பிடி? அதோட எங்கட அப்பாக்கு வழக்கம் போல வேலைக்காரி சுமதி வருவாள் தானே? இப்பயும் நான் நாள் முழுக்க கடையில நிக்க சுமதிதானே பார்க்கிறது?”

என்று அவனைத் தெளிவுபடுத்த முயன்றாள்.

“சரி ஜெயந்தி. ஆனா அதோட...."

என்று முடியாத கதையாய் இழுத்தான்.

“என்ன ரவி சொல்லுங்க”

என்று இமைகளை சுருக்கியபடி வினவினாள்.

“அம்மா சாலினிய மட்டும்..”

என்று சொல்லி விட்டு தொண்டைக்குள் விழுங்கிக்கொண்டான். அவள் இமைகள் மேலும் சுருங்கி விழிகள் இவன் வார்த்தைகளை எதிர்பார்த்து நின்றது.

“அம்மா சாலினிய மட்டும் கூட்டிக்கொண்டு வரச்சொன்னவா... ஏனெண்டா துவாரகனையும் கூட்டிக்கொண்டு வந்து காலம் முழுக்க கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறத தன்னால பார்க்கேலாதாம். துவாரகன ஒரு நல்ல சிறுவர் இல்லத்தில சேர்த்திட்டா அவங்க நல்லாப் பார்த்துப்பினம். தேவையான காசை நாங்களே அனுப்புவம். நான் நீ சாலினி மூண்டுபேரும் அம்மாவோட சந்தோசமா வாழலாம். அம்மா இது மட்டுமாவது நான் சொல்றத கேட்பியா எண்டு கேட்டாங்க”

என்று தணிந்த குரலாய் கூறி முடித்தான். செவிக்குள் நுழைந்த வார்த்தைகள் அவள் இரத்தத்தை உறைய வைத்து விட்டது. உடல் முழுவதும் சிலையானாள். விறைத்துப் போன விழிகள் கடைசியாய்ப் பார்த்த இடத்திலேயே தங்கிவிட்டன.

இவன் மெல்ல அவள் தோள்களைப்பற்றி

“ஜெயந்தி...”

என்று பயத்தோடு அழைத்தான்.

“அதுக்கு நீங்க என்ன சொன்னீங்க?”

அசையாத சிலையில் கண்ணீர் பெருக்கெடுக்க கேட்டாள்.

“அவ இதமட்டுந்தான் கடைசியா கேட்டாங்க. என்னால மறுக்க முடியல”

என்றதும் கண்களை இறுக்கி மூடிக்கொண்டு தன் தோளிலிருந்து அவன் கையை விலக்கிவிட்டு தன் மகனருகே ஓடினாள்.

“ஜெயந்தி கொஞ்சம் யோசி. நீதானே சொன்னா. அவங்க சம்மதிச்சதே பெரிய விசயம். இப்ப யார் இப்பிடியெல்லாம் இருப்பாங்க. இத மட்டும் செஞ்சா ஒரு பிரச்சனையும் இல்லை. சிறுவர் இல்லத்தில நல்லாப் பார்த்துப்பாங்க. நாங்க நினைக்கிற

நேரமெல்லாம் போய்ப்பார்த்திட்டு வரலாம்."

"ரவி பிளீஸ்... நிப்பாட்டுங்க. என் துவாரகன் தனி ஆள் கிடையாது. என் உசிரும் அவன் உடம்பும் சேர்ந்ததுதான் அவன். அவனில்லாமல் நானோ நானில்லாம அவனோ கற்பனை பண்ணிக்கூட பார்க்கேலா"

"ஆனா ஜெயந்தி. இது ஒண்டு மட்டுந்தான்.. நான் நீ சாலினியோட வசதியா சந்தோசமா இருக்கலாம்."

என்று விடாமல் தன் போராட்டத்தை தொடர்ந்தான்.

"என்ன ரவி சொல்றீங்க? வசதியா சந்தோசமாவா? வசதியால எப்பிடி ரவி சந்தோசத்த தரமுடியும்? இத்தனை வயசாகியும் உங்களாலேயே உங்கட அம்மாவ விட்டுட்டு இருக்கேலா எண்டா என்ர பிஞ்சுக்குழந்தையால முடியுமெண்டு எப்பிடி ரவி நினைச்சீங்க?"

அவன் முகம் பார்க்காமல் வழிந்தோடும் விழிகளோடு கேட்டாள். இவன் நெஞ்சம் பதைபதைத்தது. தன் நியாயமும் எதிர்பார்ப்பும் தரம் குன்றிப்போய்க் கொண்டிருப்பதை உணர்ந்தான். தன் கருத்தை நிரூபிக்க வழிகள் ஏதும் அவனுக்கு தெரியவில்லை. நியாயமற்றவைகள் தன் பக்கம் வலுச்சேர்க்க சத்தத்தை உதவிக்கு அழைத்துக் கொள்ளும்.

"இந்த ஒரு தியாகத்த கூட எனக்காக உன்னால செய்யேலாதோ?"



கத்திவிட்டான். அந்தக்கத்தலில் தான் மட்டுமே பெருந்தன்மை புரிவதாய் எங்கோ ஆழ்மனதில் கிடந்த எண்ணம் வெளிப்பட்டுவிட்டது.

“இதெல்லாம் தியாகம் இல்ல ரவி. இப்பிடிச்செஞ்சா அதுக்கு பிறகு ஜெயந்தி எண்ட ஒருத்தியே தேவல்ல..”

என்று அவன் கத்தலே தோற்கும்படி அமைதியாகச் சொன்னாள்.

“போதும் ரவி நீங்க போயிட்டு வாங்க”

என்று துவாரகனின் வண்டியோடு உள்ளே வேகமாக நுழைந்து கதவுகளை அடைத்துக் கொண்டாள். அவனுக்க எல்லாப் பக்கங்களும் அடைத்து விட்டன. செய்வதறியாது அவள் அடைத்துவிட்ட கதவுகளை தன் எதிர்காலத்தையே அழைப்பது போல் சத்தமாகத் தட்டினான்.

“ரவி போயிட்டு வாங்க... என் பிள்ளைய பிரிஞ்சு என்னால இருக்க முடியா. அதுக்காக இன்னொரு தாயிடமிருந்து பிள்ளைய பிரிக்கவும் என் மனசு சம்மதிக்காது. என்னை மன்னிச்சிருங்க. தயவு செய்து போங்க ரவி...”

என்று அவன் தட்டல் சத்தத்தை தாண்டி கத்திவிட்டு கைகளால் வாயை இறுக்க மூடிக்கொண்டாள்.

அவனும் ஜெயந்தி என்று அழைத்தபடி கதவைத் தட்டிக் கொண்டே நின்றான்.

தட்டும் சத்தம் மெல்ல ஓய்வடையத் தொடங்கியது. இப்போது ஓசை நின்றே விட்டது. மெல்லிய பெருமூச்சு விட்டுக்கொண்ட மறுகணமே வேகமாக கதவைத்திறந்து வெளியே பார்த்தாள். அவன் திரும்பி சென்று கொண்டிருந்தான். ஏதோ இனம் புரியாத எதிர்பார்ப்பாய் அவனையே விழி தொடர்ந்து நின்றாள். அவன் நேரே சென்று ஆட்டோக்குள் இருந்த சாலினியை கலங்கிய கண்களோடு முத்தமிட்டுவிட்டு புறப்பட்டுவிட்டான்.

வேர்களை மறைத்துக்கொண்ட பெருவிருட்சம் போல் தன் எதிர்பார்ப்பை எல்லாம் நெஞ்சுக்குள் புதைத்து விட்டு ஒன்றும் புரியாதவளாய் ஓடி வந்த சாலினியை அணைத்து தூக்கிக்கொண்டே உள்ளே நுழைந்தாள். வீட்டினுள் நுழைந்ததும் ஒரு விளையாட்டுப் பொருளாய் துவாரகனின் கைகளில் பட்டு சின்னாபின்னமாகிக் கொண்டிருக்கும் அந்தக்கடிதத்தைக் கண்டு ஓடிவந்து அவனை ஆரத்தழுவி முடியுமானவரை முத்தமிட்டுக்கொண்டாள்.

மறுபடியும் குழந்தைகளோடு கடைக்கு செல்கிறாள். கடைவீதியில் பல ஆட்டோக்கள் கடந்து செல்கின்றன. ஒவ்வொரு ஆட்டோ சத்தத்தின் போதும் தலையை இன்னும் அழுத்தமாகக் குனிந்து கொண்டு கடைக்கணக்கு பார்த்துக்கொண்டிருக்கிறாள்.

**(முற்றும்.)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | து | 4 | 5 |
| 6 | | து | | து | 7 | | |
| | து | 8 | | | | | து |
| 9 | 10 | | | து | | து | 11 |
| 12 | | | து | 13 | து | 14 | |
| 15 | | | | து | 16 | | |
| 17 | | | து | 18 | | து | |
| து | 19 | | | து | | து | |




சரியான விடைகளை
அனுப்ப வேண்டிய முகவரி
www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

## இடமிருந்து வலம்

1- சுருக்கமான விளக்கம்
4- கூழ் (திரும்பி)
6- கடமை
7- வாழைப்பழ வகை
8- இலங்கையின் ஆதிக்குடிகள் (திரும்பி)
9- தித்திப்பான பலகாரம்
12- வீதிகள் சந்திக்கும் இடம்
13- இதனால் சுட்ட புண் ஆறாது என்பார்கள்
14- கடவுள்
15- செய்தி (குழம்பி)
16- தமிழரின் பாரம்பரிய நடனம் (திரும்பி)
17- உறைப்பு (திரும்பி)
18- பாரம்பரிய அளவீட்டு முறை ஒன்று
19- விவசாயம் (திரும்பி)

## மேலிருந்து கீழ்

1- அகலிகையை மையப்படுத்தி புதுமைப்பித்தன் எழுதிய சிறுகதை
2- சதுரங்கத்தில் பலம் பொருந்திய காய்
3- கழகம்
4- பூவின் மடல் (தலைகீழ்)
7- ஒரு வகை அழகான மீன்
8- இலங்கையில் உள்ள திருப்புகழ் பாடப்பெற்ற திருத்தலம் (குழம்பி)
10- உத்தி
11- திருக்குறளில் இவை 133
14- கல்
16- வாகனம்

## குறுக்கெழுத்துப்போட்டி - 33 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | ங் | 2 க | ரா | ஜ | 3 வ | ன | 4 ம் |
| ந் | து | ல | து | து | ன் | து | த |
| 5 து | ங் | க | 6 ப | 7 த் | ரா | து | ரு |
| ச | து | 8 ம் | ல | ஓ | ணை | ர | ம |
| 9 ம | 10 டை | து | 11 ம் | ம | இ | து | து |
| 12 வெ | கு | 13 ளி | து | நீ | து | 14 டு | 15 வ |
| ளி | து | 16 ர | அ | ர் | 17 க | து | ட |
| து | 18 ல் | பு | து | 19 தீ | மை | து | லி |




# புதிர் 17
# குருவை விஞ்சிய சீடன்

சினமிகா

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமன் மரத்திலேறி அதில் தொங்கும் உடலைக் கீழே வீழ்த்தினான். பின்னர் அவன் கீழேயிறங்கி, அதைத் தூக்கிக் கொண்டு மயானத்திலிருந்து செல்லுகையில், அதனுள்ளிருந்த வேதாளம்,

“மன்னா! யாரையாவது பழி தீர்ப்பதற்காக இந்த நள்ளிரவில் மயானத்தில் அலைந்து திரிந்து உன்னை நீயே வருத்திக் கொள்கிறாயா? உன் நோக்கம் தான் என்ன? உன்னைப் போல் சிலர் உணர்ச்சி வசப்பட்டு ஏதாவது சபதம் எடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் பல ஆண்டுகளுக்குப் பின் அவர்களுடைய ஆவேசம் தணிந்து போய் விடுகிறது. குணவீரமன் என்ற இளைஞன் தனது சிந்தனைகளைப் புரிந்து கொள்ளாத கிராமத்தினரை வெறுத்து அவர்களை விட்டு விலகியவன். இறுதியில் அவர்களிடமே மீண்டும் திரும்பி வந்தான். அவனுடைய கதையை உனக்குக் கூறுகிறேன் கேள்!” என்றது.

அன்னாவரம் என்ற கிராமம் மலைகள் சூழ்ந்த இயற்கை எழில் நறைந்த கிராமம். அங்கிருந்த விவசாயிகள் பல நூதனமான பயிர்களை விவசாயம் செய்து வந்தனர். பலவிதமான கிழங்குகளையும், பழமரங்களையும் மூலிகைகளையும் பயிர்செய்து, அவற்றையே தங்கள் முக்கிய உணவாகவும் கொண்டு இருந்தனர்.

அந்த கிராமத்தில் குணவர்மன் என்ற இளைஞன் வசித்து வந்தான். சிறுவயது முதலே, அவன் தீவிர சிந்தனையாளனாக இருந்தான். எப்போதும், எதைப் பற்றியாவது சிந்தித்துக் கொண்டேயிருந்தவனை, கிராமத்தினர் சோம்பேறி என்று இளக்காரம் செய்தனர். அவனுடைய வாழ்க்கையின் கண்ணோட்டமே வேறுவிதமாக இருந்தது. கிராமத்து மனிதர்களுடைய வாழ்க்கைமுறை அவனுக்குக் பிடிக்கவில்லை.

“கடவுள் கொடுத்த பகுத்தறிவை நன்குப் பயன்படுத்த வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் உலகில் எத்தனையோ இருக்கின்றன.” என்பது போன்ற அவனுடைய புதுமையான சிந்தனைகள் கிராமத்தினரின் மூளையில் நுழையவில்லை.

தன்னுடைய புதிய கருத்துகளை யாரும் ஏற்காததால் சலிப்படைந்த குணவர்மன் ஒருநாள் தன் தந்தையிடம்,

"அப்பா! இங்குள்ள மக்கள் இயந்திரம் போல் இயங்குகின்றனர். இங்கிருந்தால் என் வாழ்க்கை வீணாகிவிடும்! தண்டகாரண்யக் காட்டில் புஜங்கர் என்பவர் நடத்தும் குருகுலத்தில் சேர்ந்து, என் கல்வி அறிவை அபிவிருத்தி செய்து கொள்ள விரும்புகிறேன். பிறகு அங்கிருந்து திரும்பி வந்து, எந்த கிராமத்தினர் என்னை ஏளனம் செய்கின்றனரோ, அவர்கள் எனக்கு மரியாதை செலுத்துமாறு செய்வேன்!"

என்று கூறி விட்டு, தண்டகாரண்யத்தை நோக்கிச் சென்றான்.

புஜங்கரின் ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டு இருக்கையில், ஒரு தேர் அவன் பின்னால் வந்தது. அவனிடம் வந்து தேரை நிறுத்திய தேரோட்டி,

"தம்பி! நீ எங்கு செல்கிறாய்?"

என்று கேட்க, குணவர்மன் பதில் சொல்லவும், அவன்,

"நானும் அங்குதான் செல்கிறேன்! நீயும் தேரில் ஏறிக்கொள்! மன்னரின் தாய்க்கு உடல் நிலை சரியில்லாததால், புஜங்கரை அழைத்துச் செல்ல நான் வந்திருக்கிறேன்!"

என்று கூறிவிட்டு குணவர்மனைத் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

குருகுலத்தை அடைந்ததும், குணவர்மன் புஜங்கரை கால்களில் விழுந்து வணங்கித் தன் விருப்பத்தை வெளியிட்டான்.

அதற்கு அவர்,

"மகனே! என்னிடம் சீடனாகச் சேர வேண்டுமெனில், அதற்குமுன் ஜம்புகாரண்யத்தில் என் பழைய மாணவர் வினயர் ஒரு குருகுலம் நடத்தி வருகிறார். அங்கு சென்று இரண்டு ஆண்டுகள் பயின்ற பிறகு நீ இங்கு வா!" என்றார்.

"குருவே! உங்களுக்கு என் அறிவுத் திறமையில் சந்தேகம் என்று நினைக்கிறேன். வேண்டுமானால், நீங்கள் என் அறிவை சோதித்துப் பாருங்கள்!" என்றான்.

குணவர்மனின் சிந்தனைத் திறனை சோதிக்க ஒரு புதிரொன்றை வினவ எண்ணினார். அதற்கு பதிலளிக்க ஐந்து நிமிடங்கள் காலக்கெடு விதித்தார்.

ஒரு காகித சமபக்க முக்கோணத்தை எடுத்து ஐந்து துண்டுகளாக வெட்டி, பின்னர் நான்கு சிறிய சமபக்க முக்கோணங்களை உருவாக்க பயன்படுத்தலாம். ஒவ்வொரு முக்கோணத்தையும் உருவாக்க அனைத்து துண்டுகளும் பயன்படுத்த தேவையில்லை. குணவர்மனும் ஐந்து நிமிடங்களுக்குள் சரியான பதிலளிக்க அவனை தன்னுடைய சீடனாகவே வைத்திருக்க எண்ணினார். இருப்பினும் அவனை மேலும் சோதிக்க எண்ணினார்.

“மகனே! இப்போது நான் அரண்மனைக்குச் செல்ல வேண்டி இருக்கிறது. திரும்பி வர எனக்கு ஒரு வாரம் ஆகும்! அதுவரை இந்த இரண்டு கிரந்தங்களை உன்னிடம் தருகிறேன். இவற்றை கவனமாகப் படி! இவற்றினுடைய கருத்தை நீ நன்றாகப் புரிந்து கொண்டால் மட்டுமே, நீ என் சீடனாக அமையத் தகுதியுள்ளவன்!”

என்று கூறிவிட்டு அரண்மனை தேரில் ஏறிச் சென்று விட்டார்.

உடனே, மற்ற சீடர்கள் அவனிடம்,


“இரண்டு ஆண்டுகளாக இவற்றைப் புரிந்து கொள்ள நாங்கள் படாதபாடு படுகிறோம். அப்படி இருக்க, உன்னால் ஒரு வாரத்தில் புரிந்து கொள்ள முடியுமா?”

என்று அவனை பயமுறுத்தினர். ஆனால் குணவர்மனோ,

“இதை நான் ஒரு சவாலாக ஏற்றுக் கொள்கிறேன்!”

என்று சொல்லிவிட்டு, கிரந்தங்கள் இயற்றப்பட்டிருந்த ஓலைச்சுவடிகளை ஆழ்ந்து படிக்கத் தொடங்கினான். நான்கே நாள்களில், அவற்றின் சாரத்தை குணவர்மன் நன்றாக கிரகித்துக் கொண்டான்.

அரண்மனையிலிருந்து திரும்பிய புஜங்கர், வந்ததும் உடனே குணவர்மனை கிரந்தங்களின் விளக்கம் கேட்டார். குணவர்மன் கூறிய விளக்கங்களைக் கேட்டு



அவர் வியந்து போனார்.

“மகனே! உன்னைப் போல் ஒரு புத்திசாலி எனக்கு சீடனாகக் கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!”

என்று மனமாரப் புகழ்ந்தார். அதன்பின் அவர் அரண்மனையில் நடந்ததை விவரிக்கத் தொடங்கினார்.

மன்னரின் தாயின் நோயை குணமாக்க எந்த வைத்தியராலும் முடியவில்லை. அப்போது, அவருடைய சபையில் இருந்த கவிஞர்களில் ஒருவர் தான் பத்திரப்படுத்தி வைத்திருந்த யாரோ ஒருவர் எழுதிய காவியத்தை மன்னரிடம் படித்துக் காட்டினார். காவியத்தில் வரும் நாயகிக்கு ஏற்பட்ட விசித்திர நோயின் வர்ணனைகள் மன்னரின் தாய்க்கு ஏற்பட்டிருந்த நோயை அப்படியே ஒத்திருந்தது.

அதைப் படித்துக் காட்டிய கவிஞர்,

“மன்னா! இதில் மூலிகைகளைப் பற்றிய விவரங்களும் சிகிச்சை முறை பற்றியும் எழுதியுள்ள கவிதைகளின் பொருள் எனக்கு விளங்கவில்லை. இதைப் படித்து யாரேனும் அதன் பொருளை உணர்ந்து கொண்டால், அதே மருந்துகளையும், சிகிச்சையும் அளித்துத் தங்கள் தாயை குணமாக்கி விடலாம்!” என்றார்.

அதற்காகத்தான், புஜங்கர் அரண்மனைக்கு அழைக்கப் பட்டிருந்தார். ஆனால், அவராலும் அதன் பொருளை உணர்ந்து கொள்ள முடியவில்லை.

“மகனே! எனக்கே விளங்காத கவிதைகளின் பொருள் உனக்கு ஒருக்கால் விளங்கக்கூடும்! நீ படித்துப் பார்!” என்றார்.

அவற்றை வாங்கிப் படித்ததும், உடனே குணவர்மனுக்குப் பொருள் விளங்கி விட்டது.

“குருவே! இதில் மூலிகைகளின் பெயர்கள் இரு பொருள்பட கூறப்பட்டுள்ளன. அவற்றை முறையே எடுத்து கசாயம் செய்து இதில் குறிப்பிடப்பட்டு உள்ளபடி மன்னரின் தாய் ஆடல் பாடலை ரசித்தபடி அருந்தினால் அவர் குணமடைந்து விடுவார்” என்றான்.

“ஆனால், இந்த மூலிகைகளை எப்படித் தேடுவது? நான் இவற்றைப் பற்றி கேள்விப்பட்டதே இல்லையே!” என்றார் புஜங்கர்.

“அது பற்றிக் கவலையில்லை! இந்த மூலிகைகள் அனைத்தும் என் கிராமத்தில் பயிரிடப்படுகின்றன!”

என்று குணவர்மன் கூற, புஜங்கர் மகிழ்ச்சியுடன் அவனை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். குணவர்மனை சந்தித்த மன்னர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார். உடனே, மன்னருடைய ஆட்கள் குணவர்மனுடன் சென்று அன்னாவரத்திலிருந்து மூலிகைகள் கொண்டுவர, வைத்தியர்கள் மருந்துத் தயாரித்துத் தந்தவுடன், மன்னரின் தாய் குணமானாள்.


மிகுந்த மகிழ்ச்சியுற்ற மன்னர் குணவர்மனுக்குப் பொன்னும் பொருளும் வெகுமதி அளித்தார்.

விக்ரமாதித்தனே இது உம்முடைய நேரம் குணவர்மன் புஜங்கர் கேட்ட புதிருக்கு என்ன பதிலழித்திருப்பான் என கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்

நான் சிறிது ஓய்வெடுக்கிறேன் கதை கூறி களைத்து விட்டேன் என்று முடித்தது வேதாளம்.

தூமி அன்பர்களே நீங்களும் சிந்தியுங்கள் சரியான பதிலை எமக்கு அனுப்பி வையுங்கள்.

## புதிர் 16 - விடைகள்



## சிவபூமிக்கு சுவசக்தி அபிமானி விருது

இலங்கையில் விசேட தேவையுடையோருக்கான சிறந்த பாடசாலைக்கான முதலாம் இடத்தினை கோண்டாவில் "சிவபூமி மனவிருத்தி பாடசாலை " பெற்றுக்கொண்டது. சுவசக்தி அபிமானி விருதினை சிவபூமி அறக்கட்டளையினுடைய தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி திரு.ஆறுதிருமுருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.









# சித்திராங்கதா

37

காவ்யமோகன்

## வன்னியன் விரித்த வலை

“தேவி, ராஜமந்திரியார் தான் இதனைச் செய்தார் என்று நான் சத்தியம் செய்து உரைப்பேன். இச்செயல் ஆற்ற காரணம் தங்கள் மீது கொண்ட பகை என்று அர்த்தமல்ல தேவி. தன் மகள் மீது கொண்ட பற்று. அதில் அநியாயமாய்ப் பாதிக்கப்பட்டு நிற்கப்போவது தாங்கள் என்பதையே தங்களிற்கு எச்சரித்து நிற்கிறேன்.” என்று இணக்கமான குரலில் கூறியபடி சித்திராங்கதாங்கதாவை தன்வசம் திருப்பும் முயற்சியில் முனைப்பாய் நின்றான் வன்னியத்தேவன்.

“தன் மகள் மீது கொண்ட பற்று என்றால்..... மாருதவல்லிக்காகவா?” என்று கேட்டாள் சித்திராங்கதா.

“ஆம்.. அப்பெண்ணிற்காகவேதான்..”

“மாருதவல்லிக்காக என் அரங்கேற்றத்தை தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் என்ன நேர்ந்தது வன்னியத்தேவரே? தங்கள் கூற்றில் எதிலும் தெளிவு என்பதேயில்லையே?”

“தெளிவாகவே கூறுகிறேன் தேவி”

என்றபடி தன் மேற்சால்வையின் அந்தத்தை தன் கைகளால் தாங்கிச் சுழற்றியவாறே அங்குமிங்கும் நடந்தபடி கூறத் தொடங்கினான.

“சற்றுமுன் கூறினேனே.. தங்கள் ஆட்டத்திற்கு வடநாட்டு வேந்தர் கூட தம் காலடியில் வந்து விழுந்து கிடப்பர் என்று. அது ஒன்றும் பொய்ப்புகழுரை அல்ல என்று தாங்களே அறிவீர்கள். அதற்கு தக்க ஆதாரம் உண்டு என்றும் தாங்கள் அறிவீர்கள்.”

சித்திராங்கதா அமைதியாகவே நின்றாள்.

“விஜயநகர ராச்சியத்தின் இணையில்லா மாவீரர் தஞ்சைப்படை தாங்கி ஈழம் வந்திருக்கும் படைத்தளபதியைப் பற்றித்தான் நான் கூறுகிறேன் என்று தேவி இப்போது ஊகித்திருப்பீர்கள் அல்லவா?”

“என்ன பிதற்றுகிறீர்கள் வன்னியத்தேவரே..." மெல்லிய கோபத்தோடு கேட்டாள் சித்திராங்கதா.

“உண்மையை நானும் அறிவேன் கலாராணி. தாங்கள் வீரமாகாளி கோயில் மேடையை விட்டு இறங்கிய அடுத்த நொடியிலேயே தங்களைத் தேடி அந்த மாவீரர் அலைந்த போது உக்கிரசேனன் தான் அன்று அவ்வீரனிற்கு வழிகாட்டி உதவினான். இல்லையா உக்கிரசேனா?”

என்று கூறியபடி உக்கிரசேனனை நோக்கினான்.

ஆமாம் என்பது போல் தலையாட்டினான் உக்கிரசேனன்.

வன்னியத்தேவன் கூறிய இச்செய்தி சித்திராங்கதாவிற்கு உள்ளூர பெருமகிழ்வை கொடுத்தாலும் இவ்விடத்தில் அவள் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. தன் உள்ளத்தில் பூட்டி வைத்திருக்கும் ஆசைநாயகன் தன்னைத்தேடி அலைந்தானா? இது ஒன்றும் சாதாரண விடயமல்லவே. அவள் கொண்டிருந்த காதல் பசிக்கு இச்செய்தி பெருவிருந்தல்லவா.. ஆனால் விருந்தை அனுபவிக்கும் நிலமைதான் இப்போது அவளிடம் இல்லை. தன் உணர்வுகளை சுதாரித்துக் கொண்டு

"வன்னியத்தேவரே, நான் கேட்டதற்கு பதிலுரைக்காமல் வேறு என்னவோ எல்லாம் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்? நாம் ராஜமந்திரியார் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம்."

"நல்லது தேவி, நினைவுபடுத்தினீர்கள். இல்லையென்றால் நானும் தேவையில்லாத கதைகள் இன்னும் ஏராளம் கூறியிருப்பேன். தஞ்சை வீரர் தங்கள் நாட்டியம் கண்டு பரமரசிகனாகி தங்கள் பின்னால் நாடி வருவதை ராஜமந்திரியார் எங்ஙனமோ அறிந்து கொண்டார் போலும். அவர் போட்டு வைத்திருக்கும் திட்டங்களிற்கு இது தடையாகி விடும் என்ற பேரச்சத்தினாலே தங்கள் அரங்கேற்றம் நடந்துவிடவே கூடாது என்பதில் உறுதியாய் நின்றுள்ளார்."

"அவர் போட்டுவைத்திருந்த திட்டமென்பது?"

"அது இன்னுமா தங்களிற்குப் புரியவில்லை? இணையற்ற மாவீரனை தன் எண்ணம்போல் யாழ்வேந்தன் ஆக்கி தன் மகளினை மகாராணியாக்க வியூகம் வகுக்கிறார் ராஜமந்திரியார். ஆனால் தஞ்சைவீரரோ தங்கள் நாட்டியத்தைக் கண்டு தங்களையே வலம் வருகிறார். இதில் அரங்கேற்றம் என்று வேறு



திவாகரன்

நடந்துவிட்டால் தஞ்சைவீரரை தங்களிடமிருந்து விலக்குதல் இயலாததாய் விடுமல்லவா? பின்னர் அவர் வியூகங்கள் எல்லாமே வீணாகிவிடக்கூடும். இப்போது புரிகிறதா தேவி?"

என்று வன்னியத்தேவன் கேட்டபோது சித்திராங்கதாவால் பதில் ஏதும் கூற முடியவில்லை.

நேற்றைய வன்னியர் விழாவில் ராஜ மந்திரியாரால் தான் சபையில் கடுமையாக அவமானப்படுத்தப்பட்டதற்கான பழி தீர்க்கும் படலத்தை ஆரம்பித்து விட்டான் வன்னியத்தேவன்.

வன்னியத்தேவன் சொன்னவை யாவும் உண்மைதானா என்கிற சந்தேகத்தை விட அவை உண்மையாய் இருந்தால் நிகழப்போகும் விளைவுகளை எண்ணும் போது தான் சித்திராங்கதாவால் அசையமுடியவில்லை. கன்னங்கள் நோக கற்சிலை போலவே நின்று கொண்டிருந்தாள்.

அரங்கேற்றம் தடைப்பட்ட ஆடலரசியாய் அவள் இன்னும் தன் உடலில் உயிர்பிடித்து வைத்திருக்க ஒரே காரணம் அந்த ஒரே நம்பிக்கைதான். ஆனால் அதற்கெதிராகவே சதி நடக்கிறது என்று கேள்வியுற்ற நொடி தன் நம்பிக்கை நரம்பின் கடைசி இழையும் அறுந்துவிடுகிற ஓசை அவளிற்கு மட்டும் கேட்டது. அவள் உள்ளத்தில் உயிரினை பெருஞ்சுமையாக எண்ணத் தொடங்கினாள்.

ஆனால் வன்னியத்தேவன் தொடர்ந்து கூறிய வார்த்தைகள் தான் அவள் உயிர் வாழ வேண்டியதன் அவசியத்தை தனக்கு உணர்த்துவதாய் அவள் மீண்டும் நம்பத்தொடங்கினாள்.

"ஆனால் தேவி , ராஜமந்திரயாரது இந்தத்திட்டமானது பலிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு அறவே இல்லை. ஏனெனில் தஞ்சைவீரரின் சிந்தை முழுதும் தங்களையல்லவா சுற்றி வருகிறது.."

என்று கூறிச் சிரித்தான் வன்னியத்தேவன். அந்தக்கோரமான சிரிப்பு சித்திராங்கதாவிற்கு அவ்வளவு சந்தோசத்தை உண்டுபண்ணியது.

வன்னியத்தேவன் மேலும் தொடர்ந்தான்.

"ஆனாலும் இந்த இராஜநாகத்தை பற்றி அவ்வளவு சுலபமாக நாம் எண்ணிவிடவும் கூடாது. தன் எண்ணத்தை நிறைவேற்ற எத்தகைய சதிச்செயலையும் ஆற்றவல்லவர் ராஜமந்திரியார் ஆவார். மகா அதிகாரம் கொண்ட மாமன்னரையே தன் கைப்பொம்மையாய்க் கொண்டவரல்லவா? மன்னரின் அதிகாரத்தைப் பயன்படுத்தியே தன் எண்ணங்களை அரச ஆணையாக்கி சாதித்துக்கொள்வார். அவ்வாறன்றே ஒரு நாட்டிய கலாராணியின் அரங்கேற்றப் பெருவிழாவையே தடுத்து நிறுத்தி இருக்கிறார். இதற்கு மேல் வேறென்ன ஆதாரம் சொல்லவேண்டும். நான் சொல்வது புரிகிறதா தேவி?"

என்று சித்திராங்கதாவை நோக்கிக் கேட்டான் வன்னியத்தேவன்.

சித்திராங்கதா அமைதியாகவே ஆம் என்பது போல் தலையாட்டினாள்.

“மந்திரியாரின் சதித்திட்டங்கள் பலிக்காதிருக்க இப்போதிருக்கும் உபாயம் ஒன்றே ஒன்றுதான்.” என்று கூறியவாறே சித்திராங்கதாவின் முகத்தை கூர்ந்து அவதானித்தான் வன்னியத்தேவன்.

அவளது கலவரமான முகத்தில் தெரிந்த அந்தப் பெரிய வினாக்குறியை இரசித்தவாறே மேலும் பேசத் தொடங்கினான் வன்னியத்தேவன்.

*வலை விரியும்...*

## வெள்ளை மாளிகை வந்தது கிறிஸ்துமஸ் மரம்

கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு வெள்ளை மாளிகையில் வைப்பதற்காக வட கரோலினாவிலிருந்து கொண்டுவரப்பட்ட 18.5 அடி உயரமான கிறிஸ்துமஸ் மரத்தை அமெரிக்க அதிபரின் மனைவி ஜில் பைடன் பெற்றுக்கொண்டார்,




ஆண்டுதோறும் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு வெள்ளை மாளிகையை அலங்கரிப்பதற்காக கிறிஸ்துமஸ் மரம் குதிரை வண்டியில் கொண்டுவரப்படுவது வழமையாகும்.

## உலகின் பணக்கார நாடுகள் பட்டியலில் சீனா முதலிடம்

உலகின் பொருளாதார வளம் நிறைந்த டாப் 10 நாடுகள் பட்டியலை மெக்கின்ஸ்க்கி அண்ட் கோ நிறுவனம் வெளியிட்டுள்ளது. இதில் அமெரிக்காவை பின் தள்ளி சீனா முதலிடத்தை பிடித்துள்ளது.

2000ம் ஆண்டில் 7 டிரில்லியன் டாலர்களாக இருந்த சீனாவின் பொருளாதார வளம், தற்போது 120 டிரில்லியன் டாலர்களாக அபார வளர்ச்சியடைந்துள்ளது. அதேவளை, அமெரிக்காவின் பொருளாதார வளம் 90 டிரில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.










## இ.தனிஸ்ரன்

***//நடைபாதை கடையில் உன் பெயர் படித்தால்...
நெஞ்சுக்குள் ஏனோ மயக்கங்கள் பிறக்கும்//***

அளவெட்டியில் வகுப்பெடுக்க சென்று வரும் போதெல்லாம் விளான் சந்தியையும் சண்டிலிப்பாய் பண்டத்தரிப்பு ரோட்டையும் இணைக்கும் வீதியால் செல்வது வழமை. சரியாக, இளவாலை பற்றிமாதா கோவிலுக்கு எதிரே இருக்கிறது ஒரு தையலகம். அந்த வீதியில் எப்பொழுது சென்றாலும் சீமைக்கிழுவைகளுக்கிடையில் தொங்கும் வெள்ளை பெயின்ட் அடித்த தகரத்தில் கறுப்பு வர்ணத்தால் எழுதப்பட்ட அந்த தையலகத்தின் போர்ட்டை திரும்பி பார்க்காத நாளே இல்லை. எவ்வளவு அவசரமாக வகுப்புக்கு



சென்றாலும் சரி மிக ஆறுதலாக எதையோ சிந்தித்தபடி வந்தாலும் சரி, என்னையும் அறியாமல் அந்த போர்ட்டை நோக்கி கண்கள் செல்லும்.



***// நிலநடுக்கம் அது கொடுமைகள் இல்லை
மனநடுக்கம் அது மிகக்கொடுமை //***

நடைபாதை கடைகள் மட்டுமில்லை இன்னும் எங்கெங்கோ! எங்கு பார்த்தாலும் மனம் சில நிமிடம் ஸ்தம்பித்து நினைவுகளை அசைபோடுகிறது. அப்படி அந்த இரண்டெழுத்துக்களின் இணைவில் என்ன கருத்தாக்கங்கள் நடக்கிறதோ எனக்கு விளக்குவதேயில்லை.

***//இது என்ன காற்றில் இன்று ஈரப்பதம் குறைகிறதே//***

***

***//ஐயரு பொண்ணு மீன் வாங்க வந்தா லவ் மேரேஜ்ன்னு தெரிஞ்சுக்கோ//***

வீட்டுக்கு முன்னால கோவில். பதினாறு வயது வரை கோவிலில் ஐயருக்கு எடுபிடி என்பதாக ஒரு வாழ்வு. தேவாரம் பாடுவதில் தொடங்கி,

***“ஓம் யோபாம் புஷ்பம் வேத புஷ்பவான் ப்ரஜாவான் பஸ மோன் பவதி***
***சந்த்ரமா வா அபாம் புஷ்பம் புஷ்பவான் ப்ரஜாவான் பஸ மோன் பவதி***
***ய ஏவம் வேத யோபாமாயதனம் வேத ஆயதனவான் பவதி”***

என மந்திரங்களின் அர்த்தம் தெரியாது போனாலும் மீண்டும் மீண்டும் கேட்டு கேட்டு சமஸ்கிருதம் நாவில் நர்த்தனம் ஆடிய காலமொன்றிருந்தது. பின் வாசிப்பு - சிந்திப்பு என எல்லைகள் விரிய, கடவுள் இல்லை என்று மதத்திலிருந்து முற்றாய் விலகிய பின், அவளின் சந்திப்பு.

கோவில் பக்கமே திரும்பாதவன் இப்பொழுது அவள் அருகில் கோவில்களில் நிற்கிறான். சின்ன





சின்ன சண்டைகளை தீர்த்து வைக்க எல்லாம் கடவுளை கூப்பிடுகிறான்!

கடவுள் அவ்வளவு வெட்டியாக இருக்கிறாரா என்ன?

***

***//கல்லறை மீது தான் பூத்த பூக்கள் என்று தான் வண்ணத்துப்பூச்சிகள் பார்த்திடுமா?//***

வண்ணத்துப்பூச்சி! குழந்தைகள் போல அழகான ஆடைகள் அணிவதிலா? கபடமில்லாத சிரிப்பாலா? கல்வியின் மேன்மையின் வண்ணச்சித்திரங்கள் தீட்டுவதாலா? எத்தனையோ காரணங்கள்! அந்த வண்ணாத்துப்பூச்சியை கொண்டாட! யாருக்கு வண்ணத்துப்பூச்சி பிடிக்காது. தோட்டத்தில் பல்வேறு வண்ணங்களில் வண்ணத்துப் பூச்சிகளை பார்த்து ரசித்தவன் இந்த வண்ணத்துப்பூச்சி மேலே லஜித்ததில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

ரசிப்பவனிடம் என்ன இருக்கிறது?

***//கல்லறை மேலே பூக்கும் பூக்கள் கூந்தலை போய் தான் சேராதே//***

கல்லறை பூ என்று வண்ணத்துப்பூச்சி பார்க்கவில்லை. அது தனக்கான பூவை தானே தேடிக்கொண்டது. கூந்தல் முழுதும் சூடிக்கொண்டது.

***

***//அவன் கூந்தல் ஒன்றும் நீளமில்லை***
***அந்தக்காட்டில் தொலைந்தேன் மீளவில்லை//***

சங்ககாலம் தொடங்கி இன்றைய திரைப்பாடல்கள் வரை பெண்ணின் தலைமுடி என்றால் நீளமாக இருக்க வேண்டும் - அதுவே அழகு என்று கவிஞர்கள் ஒரு விம்பத்தை உருவாக்கி வைத்திருக்கிறார்கள். இந்த கவிஞர்களின் "ஐஸ்" எல்லாம் இவனுக்கு எந்த நடுக்கத்தையும் கொடுக்கவில்லை.

ஆனால், சிறுவயதில் அன்ரெனாவை சுற்றி சுழற்றி ஸ்ரேசன் பிடித்து, என்ன சேனல் இழுக்குது? இப்ப இழுக்குதே? இப்ப? என்று கேட்டு கேட்டு டிவி பார்த்த நாட்களில், பொதிகை தான் ஒரே தஞ்சம்.

அதில் ஞாயிற்றுக்கிழமை திரைப்படத்தின் இடையில் வரும் விளம்பரங்களில் , அஞ்சால் அலுப்பு மருந்து , கத்தரிக்கவும் கலக்கவும் தடவவும் என்ற படி வரும் "டை" விளம்பரம் மற்றும் கோபால் பல்பொடி, நிஜாம்பாக்கு இவற்றோடு அன்றைய தேதியில் அறிமுகமானது தான் "கார்த்திகா" சாம்பூ விளம்பரம். அதில் விளம்பரத்தில் நடித்த பெண்ணுக்கு தலைமுடி முழுங்கால்களை முட்டும். அங்கிருந்து வந்த ஆசை, கற்பனை தன் கதாநாயகிக்கும் முடி நீளமாக இருக்கவேண்டும் என்பது.



இன்று முடிவே வேறு மாதிரி இருக்கும் போது முடி மட்டும் முடி போடுமா என்ன?

***//மழை மட்டுமா அழகு ! சுடும் வெயில் கூட ஒரு அழகு !***
***மலர் மட்டுமா அழகு ! விழும் இலை கூட ஒரு அழகு !//***

நீள முடி மட்டுமில்லை. கட்டை முடியும் அழகு தான்.

***

***//உலகத்தில் எத்தனை பெண் உள்ளது***
***மனம் ஒருத்தியை மட்டும் கொண்டாடுது***
***ஒரு முறை வாழ்ந்திட திண்டாடுது இது***
***உயிர் வரை பாய்ந்து பந்தாடுது//***

வாலி ஆயிரம் எனுமொரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில், கவிஞர் வாலியோடு பல சினிமா பிரபலங்கள் உரையாடி வினா தொடுத்து, அவருடைய அனுபவங்களை பகிர்ந்து கொண்டு



சென்றார்கள். அதில் கார்ட்டூனிஸ்ட் மதன் உரையாடும் போது வாலியிடம் ஒரு கேள்வி கேட்டார்.

காதலை பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்கள்?

வாலி சொன்னார், என் பதிலை கேட்டு எல்லாருமே என்னை ஏசுவார்கள்!

“லவ் எண்டது ஒண்டுமே இல்லை ஜஸ்ட் பிசிகல் அட்ராக்க்ஷன் தான்“.

அவனுக்கு அவள் அழகா தெரிவாள். அது தான் பேஸ்.

மதனுக்கு அந்த பதில் ஏற்புடையதாக இருக்கவில்லை. இவ்வளவு காவியங்கள், பாடல்கள் கதைகள் ஏந்தி காலம் தாண்டி வாழும் காதல் என்பது வெறும் உடலீர்ப்பு என்றால்??

காதலும் கடவுளும் ஒன்று! இரண்டுமே எங்கு இருக்கிறது? ஏன் தான் இருக்கிறது? என்ன செய்யும் என்று எதுவும் தெரியாது! ஆனாலும் எங்கோ இருந்து ஏதோ செய்து கொண்டேயிருக்கும். பல ஆயிரம் காதல் பாடல்கள் எழுதிய கவிஞனுக்கு கூட அது விளங்கவில்லையே!

***

***//நான் என்றால் நானே இல்லை நீ தானே நானாய் ஆனேன்//***

சுஜாதா ஒரு முறை விகடனில் ஒரு வாசகர் கேள்விக்கு இப்படி பதில் எழுதியிருந்தார்

ஒன்றின் மேல் நம்பிக்கை வேண்டும், ஏதாவது ஒன்று. உதாரணம் கடவுள், இயற்கை,உழைப்பு, வெற்றி இப்படி ஏதாவது. நம்பிக்கை நங்கூரம் போல. கேள்வி கேட்காத நம்பிக்கை.கேள்வி கேட்பது சிலவேளை இம்சை. நவீன விஞ்ஞானம் அதிகப்படியாகக் கேள்வி கேட்டு இப்போது தவித்துக்கொண்டிருக்கிறது.

அசையாத நம்பிக்கையை தீவிரமான காதல் என்று சொல்லலாம். அல்லது தீவிரமான காதலில் தான் அசையாத நம்பிக்கை பிறக்கிறது.

***‘உன்னாலே எந்நாளும் என் ஜீவன் வாழுதே’***

காதலும் ஒரு நம்பிக்கை என்பதிலிருந்து நம்பிக்கையே காதல் தான் என முகிழ்தல் அநாதியானது.



***




**எஸ்.எஸ்.நுஜன்**

வருகிற பெப்ரவரி 14, 2022 இல் 38 வயதாகும் டி வில்லியர்ஸ் கிரிக்கெட் உலகிற்கு விடை கொடுத்து இருக்கிறார். வெறுமனே 16 முதல் தர ஆட்டங்களில் விளையாடிய நிலையில், சர்வதேச கிரிக்கெட் அறிமுகத்தை 2004 இல் இங்கிலாந்திற்கு எதிரான டெஸ்ட் போட்டியில் மேற்கொண்டிருந்தார். அப்போட்டியில் ஆரம்ப மட்டையாளராக களமிறங்கி இருந்தாலும் பின்னர் மத்திய வரிசைக்கு கீழிறக்க பட்டதுடன் விக்கெட் காப்பாளராகவும் செயற் பட்டார். முதலாம் இலக்கத்தில் இருந்து எட்டாம் இலக்கம் வரை



மட்டையாளராக களமிறங்கி அவற்றில் பெரும்பாலான இலக்கங்க ளில் சாதித்துக் காட்டினார்.

2006 மற்றும் 2007 சில சறுக்கல் ஏற்பட்டாலும், 2008 இல் ஆட்டமிழக்காமல் 103 ஓட்டங்களை 109 பந்துகளில் டர்பனில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக எடுத்த வில்லியர்ஸ் அதே வருடத்தில் இந்தியாவுக்கு எதிராக இரட்டை சதம் விளாசிய முதல் தென்னாப்பிரிக்கா வீரர் ஆனார்,



அதுவும் இந்தியாவின் அகமதாபாத் மைதானத்தில் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்திலும் ஆஸியிலும் சதம் கடந்து 2008 இல் 1000 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார்.

2010 இல் அபுதாபியில் பாக்கிஸ்தானுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 274 ஓட்டங்களை எடுத்தார். இது அப்போது தென்னாப்பிரிக்கா வீரர் ஒருவர் டெஸ்டில் எடுத்த அதிக ரன்கள் ஆகும் (ஹாசிம் அம்லா பின்னர் முச்சதம் பெற்றிருந்தார்).




மார்க் பவுச்சர் ஓய்வு பெற டெஸ்ட் போட்டியில் நிரந்தர விக்கெட் காப்பாளராக நியமிக்கப்பட்டார். ஒருநாள் மற்றும் ரி20 அணிகளின் அணித்தலைவர் பதவியும் இவரை தேடி வந்தது. ரி20 அணித்தலைவர் பொறுப்பை டு பிளஸ்சிஸ் க்கு கொடுத்த வில்லியர்ஸ், 2014 இல் டெஸ்ட் விக்கெட் காப்பாளர் பொறுப்பை டி கோக் க்கு கொடுத்தார்.

2015 இல் ஒருநாள் சர்வதேச போட்டி ஒன்றில் வெறுமனே 44 பந்துகளில் 149 ஓட்டங்கள் எடுத்து அதிரடி காட்டினார். ஆம், அதே வில்லியர்ஸ் தான் டெல்லி டெஸ்டில் 6 மணிநேரம் துடுப்பாட்டம் செய்து 297 பந்துகளை சந்தித்து 43 ரன்கள் மட்டும் எடுத்தார். அத்துடன் 2012ம் ஆண்டு அடிலெய்ட் இலும் டு பிளஸ்சிஸ் உடன் சேர்ந்து 4 மணிநேரம் துடுப்பாட்டம் செய்து 220 பந்துகளில் 33 ரன்கள் எடுத்து போட்டியை வெற்றி தோல்வி இன்றி முடித்து வைத்தார். டெஸ்ட் ஒருநாள் ரி20 என அனைத்திலும் சிறப்பாக செயற்படக்கூடிய வீரர் இவர்.

2014 இல் கிரேம் சிமித் க்கு பின் தென்னாப்பிரிக்கா டெஸ்ட் அணித்தலைவர் ஆவார் என நினைத்த போது அம்லா தலைவரானார். 2016 இல் இங்கிலாந்து உடனான டெஸ்ட் தொடரின் நடுவே அம்லா பதவி விலக, டி வில்லியர்ஸ் நெடுநாள் ஆசையான தென்னாப்பிரிக்காவின் டெஸ்ட் அணித்தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். அணித் தலைவர்



| போட்டி வகை | போட்டிகள் | இன்னிங்ஸ் | ஆட்டமிழக்கவில்லை | ஓட்டங்கள் | அதிக பட்சம் | சராசரி | சந்தித்த பந்துகள் | அடித்தாடும் வீதம் | சதங்கள் | அரைச்சதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| டெஸ்ட் | 114 | 191 | 18 | 8765 | 278* | 50.66 | 16077 | 54.51 | 22 | 46 |
| ஒருநாள் சர்வதேசம் | 228 | 218 | 39 | 9577 | 176 | 53.5 | 9473 | 101.1 | 25 | 53 |
| ரி20 சர்வதேசம் | 78 | 75 | 11 | 1672 | 79* | 26.12 | 1237 | 135.2 | 0 | 10 |
| முதல் தர ஆட்டங்கள் | 141 | 238 | 23 | 10689 | 278* | 49.71 | 19026 | 56.18 | 25 | 60 |
| ஒருநாள் | 263 | 252 | 44 | 11123 | 176 | 53.47 | | | 29 | 63 |
| ரி20 | 340 | 320 | 67 | 9424 | 133* | 37.24 | 6277 | 150.1 | 4 | 69 |

பதவி கிடைத்த அந்த டெஸ்ட் தொடரில் அதுவரை 78 டெஸ்ட் இன்னிங்ஸ்களில் ரன் எடுக்காது ஆட்டமிழக்காத வில்லியர்ஸ், தொடர்ச்சியாக மூன்று முறை ரன்கள் எதுவும் இன்றி ஆட்டமிழந்தார்.

2019 உலகக் கிண்ணம் மற்றும் 2021 ரி20 உலகக் கிண்ணம் என்பவற்றில் விளையாட விரும்பினாலும் அவை நடக்கவில்லை.

கிரிக்கெட்டில் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி20 என மூன்று விதமான ஆட்டங்களிலும் 360 பாகை வீரராகவும் அதிரடி காட்டிய வில்லியர்ஸ், கிரிக்கெட் மட்டுமல்லாது ரக்பி, கோல்ஃப் மற்றும் டென்னிஸ் என அனைத்திலும் திறமையான ஒரு சகல துறை விளையாட்டு வீரன்.

***அவரது வாழ்க்கையின் இரண்டாம் இன்னிங்ஸ்க்கு தூமியின் அன்பான வாழ்த்துக்கள்.***

## பிரேக்குகள் எதற்கு....?

ஒருமுறை இயற்பியல் ஆசிரியர் ஒருவர் தனது மாணவர்களிடம் கேட்டார்

“ஏன் வாகனங்களில் பிரேக்குகள் வைக்கப்பட்டுள்ளன ?”

பல வகையான மாறுபட்ட பதில்கள் கிடைத்தன.
“நிறுத்துவதற்கு”
“வேகத்தைக் குறைப்பதற்கு”
“மோதலைத் தவிர்ப்பதற்கு ”
“மெதுவாக செல்வதற்கு”
”சராசரி வேகத்தில் செல்வதற்கு”

என பல்வேறு பதில்கள் மாணவர்களிடம் வந்தது.

“வேகமாக ஓட்டுவதற்கு” என்ற பதிலை சொன்ன மாணவனை பார்த்து மற்ற மாணவர்கள் சிரித்தனர்.

அந்த பதிலே சிறந்த பதிலாக ஆசிரியரால் தெரிவு செய்யப்பட்டது.

ஆம்... பிரேக்குகள் நாம் வேகமாக செல்வதற்காகத் தான் வைக்கப்பட்டுள்ளன.

உங்கள் காரில் பிரேக்குகள் இல்லை என்று வைத்துக் கொள்ளுங்கள். நீங்கள் உங்கள் காரை எவ்வளவு வேகமாக ஓட்டுவீர்கள்? நிச்சயமாக உங்களால் வேகமாக ஓட்டமுடியாது.

உங்கள் வாழ்க்கையில் வரும் “பிரேக்குகள்” உங்கள் வேகத்தை குறைப்பதற்கு அல்ல. வேகமாகச் செல்வதற்கு தான்...!!!